நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.116/2025

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | தனபால் |
| கிராமம் | : | சப்பட்டநாயக்கன்பாளையம் |
| வட்டம் | : | ஊத்துக்குளி |
| மாவட்டம் | : | திருப்பூர் |
| சாட்சி வரிசை எண் | : | PW7 |
| வயது | : | 33 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6 ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.25 PM

1. மேற்படி நான் இந்த நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்ட இனோவா காரை இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்து ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் திரும்ப பெற்றுக்கொண்டேன். (**அந்த இனோவா கார்**

**அ.சா.பொ.1 ஆககுறியீடு செய்யப்படுகிறது.)**

2. மேற்படி அ.சா.பொ. 1 காரைதான் ஆனந்த் என்பவருக்கு விற்பனை செய்தேன். அந்த காரை பயன்படுத்திதான் கோவிந்தசாமி என்பவரை கடத்தினார்கள் என்று இந்த நீதிமனற்த்திற்கு சாட்சியம் அளிக்க வரும்போதுதான் எனக்கு தெரியும். மேற்படி வாகனத்தை எதிரியடிம் இருந்து போலீசார் கைப்பற்றிய பிறகு காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள்.

3. மேற்படி தகவலை போலீசார் எனக்கு 2024 ம் வருடம் சொன்னார்கள். அதனால் மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு 2024 ம் வருடமே தெரியும் என்றால் சரிதான். எதிரி ஆனந்தன் கார் கொடுத்த வகையில் எனக்கு பழக்கம். மற்றவர்கள் எனக்கு தெரியாது.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.35 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**